**செ.வெ.எண்:** **நாள்:18.08.2021**

**நாமக்கல் மாவட்டம்**

**உலக இரத்த கொடையாளர் தினத்தை முன்னிட்டு, 25 தன்னார்வ இரத்த தான கொடையாளர்களை பாராட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் நற்சான்றிதழ்களை வழங்கினார்.**

-----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உலக இரத்த கொடையாளர் தினம் (14.06.2021)-யை முன்னிட்டு, தன்னார்வ இரத்த தான கொடையாளர்களை பாராட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் இன்று (18.08.2021) நற்சான்றிதழ்களை வழங்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் உலக தன்னார்வ இரத்த தான கொடையாளர் தினம் ஜுன்-14-ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் 3 அரசு இரத்த வங்கிகளும் 14 இரத்த சேமிப்பு நிலையங்களும் உள்ளன. கடந்த 2020-ஆம் ஆண்டு கோவிட் 19 அவசர கால நிலையில் 3 அரசு இரத்த வங்கிகள் மூலமாக 5,077 யூனிட்டுகள் சேகரிக்கப்பட்டது. அவற்றில் 2,308 யூனிட்டுகள் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 2021-ம் ஆண்டில் இது வரை (ஜீலை) 2,912 யூனிட்டுகள் இரத்தம் சேகரிக்கப்பட்டு, இவற்றில் 1,723 யூனிட்டுகள் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த்தொற்று காலத்திலும் தன்னார்வலர்கள் தங்களது இன்னல்களை பொருட்படுத்தாது, உயிர் காக்கும் உயரிய சேவை நோக்கில் இரத்த தானம் அளித்த 25 தன்னார்வ இரத்த தான கொடையாளர்களை பாராட்டி, நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர், 100-வது முறையாக இரத்த தானம் அளித்த எர்ணாபுரம் அரசு மருத்துவமனை மருத்துவர் மரு.இராஜேந்திரன் அவர்களை சிறப்பிக்கும் வகையில் மாவட்ட அட்சித்தலைவர் அவர்கள் பாராட்டு சான்றிதழையும், கேடயத்தையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.ராஜமோகன், மாவட்ட குருதி பரிமாற்று அலுவலர் மரு.அன்புமலர், மாவட்ட திட்ட மேற்பார்வையாளர் திருமதி.மேரி லதா தாஸ் மற்றும் ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் திரு.இராஜேஷ் கண்ணன், திருச்செங்கோடு, இராசிபுரம் இரத்த வங்கி மருத்துவ அலுவலர்கள், இரத்த வங்கி ஆய்வக நுட்புநர்கள் மற்றும் செவிலியர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.